பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (அவி—IV) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை — 600 009.
விகாரி, ஆனி — 9,
திருவள்ளுவர் ஆண்டு—2050.

**கடித எண்.20940/அவி—IV/2019 — 1, நாள் 24.06.2019**

அனுப்புநர்
டாக்டர். சீ. ஸ்வர்ணா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து துறை செயலாளர்கள், சென்னை—9,
அனைத்து துறை தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட நீதிபதிகள்/
தலைமை குற்றவியல் நீதிபதிகள்,
பதிவாளர்கள், சென்னை உயர்நீதி மன்றம், சென்னை—104.

ஐயா / அம்மையீர்,

பொருள்: அடிப்படை விதிகள் — அடிப்படை விதி 49—ன்படி முழுக்கூடுதல் பொறுப்பு வழங்கி ஆணை வெளியிடுதல் — சில தெளிவுரைகள் — வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.153, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி—IV) துறை, நாள் 05.12.2017.
2. அரசு கடித எண்.26830/அவி—IV/2017—1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி—IV) துறை, நாள் 20.12.2017.

* * * * *

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒரு அரசு ஊழியர் ஒரு பதவியை மட்டும் தான் முழுக்கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிய ஆணையிடப்படவேண்டும் என அடிப்படை விதி 49—க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளில் முழுக்கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிபவர்களை 31.12.2017—க்குள் விடுவிக்க வேண்டும் எனவும், எவரும் ஒரு பதவிக்குமேல் முழுக்கூடுதல் பொறுப்பேற்று பணிபுரியவில்லை என்பதை துறைத் தலைமை உறுதி செய்து கொள்ளவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. மேற்சொன்னவாறு ஆணை மற்றும் அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்ட பின்னரும் அடிப்படை விதி 49—ஐ மீறி, ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை முழுக்கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிய ஆணை வெளியிடப்பட்டு, முழுக்கூடுதல் பொறுப்புபடி வழங்கக் கருதும்போது, ஒரு பதவிக்கு மட்டும் கூடுதல் பொறுப்புப்படி வழங்க உத்தேசிக்கப்படுவதாக கருத்துருக்கள்

(த.பி.பா)

அனுப்பப்படுகின்றன. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு முழுக்கூடுதல் பொறுப்பேற்க ஆணை வெளியிடுவது அடிப்படை விதி 49 (1)-க்கு இணக்கமாக இல்லை. எனவே, இனிவருங்காலங்களில் இவ்வாறு ஆணையிடுவதை தவிர்த்து, நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை முழுக்கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிய நேரிடும்போது, ஒரு பதவியை மட்டும் முழுக்கூடுதல் (Full additional charge) பொறுப்பேற்று பணிபுரிய ஆணையிடப்பட வேண்டும் எனவும் மற்ற பதவிகளுக்கு முழுக்கூடுதல் பொறுப்பு என ஆணையிடப்படாமல் "பொறுப்பு (incharge)" என ஆணையிடப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன். இதனை தவறாது பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.

நகல்:-

முதன்மை பொது தணிக்கை அலுவலர் (A&E), சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9/1/35/5.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ-II) துறை,
சென்னை-9, (அரசு வலைதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு).
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.